த. நா.ச.பே. எண் : 015 நாள் : 22.03.2018

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (22.3.2018) சட்டப்பேரவையில், எதிர்க்கட்சி துணை தலைவர் திரு.துரைமுருகன் அவர்கள் கண்ணன்கோட்டை – தேர்வாய்கண்டிகை நீர்தேக்க திட்டம் மற்றும் தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பது தொடர்பாக எழுப்பிய கேள்விகளுக்கு விளக்கம் அளித்தார்கள்.**

---

மாண்புமிகு பேரவை துணை தலைவர் அவர்களே,

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் சொன்ன கருத்து சரியில்லாத கருத்து. ஏன் என்று சொன்னால், நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். கடந்த முறை கூட நானும் அண்ணனும் நேரடியாக ஆந்திரா மாநிலத்திற்கு சென்று, மாண்புமிகு ஆந்திர மாநில முதலமைச்சர் திரு.சந்திரபாபு நாயுடு அவர்களை சந்தித்து கேட்டோம். அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், மாநிலம் இரண்டாக பிரிந்து விட்டது. எங்களுக்கு உள்ள 5 டி.எம்.சி. தண்ணீரில், நாங்கள் 2.5 டி.எம்.சி தண்ணீர் தான் தருவோம் என்கிறார்கள். மீதமுள்ள 2.5 டி.எம்.சி தண்ணீரை நீங்கள் போய் தெலுங்கானாவில் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். மீறி கேட்டால், நீங்கள் போய் கர்நாடகாவில் வாங்க வேண்டும், மத்திய பிரதேசத்தில் வாங்க வேண்டும், இப்படி அவர்கள் பல டி.எம்.சி. தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று ஒவ்வொருத்தர் மீதும் காரணம் காட்டி நமக்கு தண்ணீர் தர மறுக்கிறார்கள். இப்போது கூட, நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி, நம்முடைய செயலாளர் அவர்களும், தலைமைச் செயலாளர் அவர்களும், நானும் தொடர்ந்து கடிதம் எழுதியதன் வாயிலாகத் தான், இந்த தண்ணீர் நமக்கு கிடைத்திருக்கிறது. கிட்டத்தட்ட 2 டி.எம்.சி. தண்ணீருக்கு மேல் நமக்கு கிடைத்திருக்கிறது. இப்போது கிட்டத்தட்ட 4.5 டி.எம்.சி. தண்ணீர் இருக்கிறது. அதுமட்டுமல்ல, சென்னை மக்களுக்கு தேவையான குடிநீர் வழங்குவதற்காக அம்மாவுடைய அரசு இன்றைக்கு கண்ணன்கோட்டை தேர்வாய்கண்டிகை நீர்தேக்கம் கட்டப்பட்டு 1 டி.எம்.சி. தண்ணீர் தேக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. கிட்டத்தட்ட 330 கோடி ரூபாயில் திட்ட மதிப்பீடு செய்து, அந்தப் பணி துவங்கப்பட்டது. நிலம் கையகப்படுத்துவதில்

சில பேர் நீதிமன்றம் போய் விட்டார்கள். நீதிமன்றத்திற்கு போன காரணத்தினால் தான் இந்த திட்டம் முடிக்க முடியாமல் இருக்கிறது. அதுகூட பேச்சுவார்த்தை நடத்தி, உடன்பாடு ஏற்பட்டு, அந்த நிலத்தை எல்லாம் கையகப்படுத்தி இன்னும் நான்கு, ஐந்து மாதத்திற்குள் அந்தப் பணி நிறைவு பெற்று, 1 டி.எம்.சி. தண்ணீர் தேக்கி, நம்முடைய சென்னை மாநகர மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்குவதற்கான நடவடிக்கையை அம்மாவுடைய அரசு எடுக்கும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஆக, அம்மாவுடைய அரசு தான் இதை செய்திருக்கிறது. உங்களுடைய அரசு கூட செய்யவில்லை. இப்பொழுது புதிதாக இந்த நீர்தேக்கத்தை கட்டியதும் அம்மாவுடைய அரசு தான் என்பதை தங்கள் வாயிலாக எதிர்க்கட்சி துணை தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை துணை தலைவர் அவர்களே,

கண்ணன்கோட்டை – தேர்வாய்கண்டிகை நீர்தேக்க திட்டம். இந்த திட்டம், 330 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11.9.2013 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, பணி துவங்கப்பட்டது. அந்த திட்டம் மூலம் 1 டி.எம்.சி. நீரை தேக்க வழிவகை செய்யப்பட்டது. அந்த திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டது. நிலம் கையகப்படுத்தப்படும் போது சில நில உரிமையாளர்கள் நிலத்தை கொடுக்க மறுத்து, நீதிமன்றத்திற்கு சென்று விட்டார்கள். ஆகவே, நீதிமன்றத்திற்கு சென்றபிறகு, அந்தப் பணி முழுமை பெறவில்லை. கிட்டத்தட்ட 85 சதவிகித பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன. எஞ்சிய 15 சதவிகித பணிகள் தான் நிறைவு பெறவுள்ளது. இப்போது நீதிமன்றத்திலிருந்து நமக்கு நல்ல தீர்ப்பு கிடைக்கப் பெற்ற காரணத்தினாலே, அந்த விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகை வழங்கி, எஞ்சியுள்ள பகுதியும் கட்டிமுடிக்கப்பட்டு, அந்த 1 டி.எம்.சி. தண்ணீர் தேக்கப்பட்டு, நம்முடைய சென்னை மாநகர மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை துணை தலைவர் அவர்களே,

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் பாரத பிரதமர் அவர்களிடத்திலே கடிதம் கொடுத்ததாக ஒரு விளக்கத்தை சொன்னார். நமக்கு எப்படியாவது எய்ம்ஸ் மருத்துவமனை தமிழகத்திற்கு வரவேண்டும். அதுதான் நம்முடைய குறிக்கோள். ஏனென்றால், ஐந்து இடங்களை தேர்வு செய்து கமிட்டி எல்லாம் வந்து பார்த்தார்கள். ஒவ்வொரு இடத்திலும், ஒரு குறைபாட்டை சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஈரோட்டில் பார்த்தீர்களானால், சாலை நடுவில் போகிறது, அதனால் இந்த இடத்தை தேர்வு செய்ய முடியாது. மதுரையில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் குழாய் போகிறது, அதனால் இங்கேயும் அமைக்க முடியாது. இப்படி ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு காரணத்தை சொல்லி, நமக்கு வர ஒரு வாய்ப்பை தட்டி கழித்து விடுவார்களோ என்று கருதி தான், அந்த இடத்தில் 300 ஏக்கர் ஒரே பகுதியில் இருக்கிறது. இங்கே கொடுங்கள் என்றால், அதற்கும் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறார்கள். இருந்தாலும் எங்களை பொறுத்தவரைக்கும் ஐந்து இடத்தில் ஏதாவது ஒரு இடத்தை நீங்கள் தேர்வு செய்து எங்களுக்கு எய்ம்ஸ் மருத்துவமனை தமிழகத்தில் வருவதற்கு உண்டான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி கொண்டு இருக்கின்றோம். எனவே, தமிழகத்திலே எந்த இடத்தில் வந்தாலும் அது நமக்கு பயனுள்ளதாக இருக்கும். ஆகவே, நமக்கு வரவேண்டிய எய்ம்ஸ் மருத்துவமனை வரவேண்டும். அதுதான் நம்முடைய நோக்கம். ஆகவே, அதை எப்பாடுபட்டாவது நிச்சயம் வாங்கிவிடுவோம். ஆகவே, எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு அந்த சந்தேகம் தேவை இல்லை.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9